**<u>செய்தி வெளியீடு எண்.302</u>** **<u>நாள். 23.4.2008</u>**

## <u>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 144 பணியாளர்களுக்கு நிரந்தப் பணிநியமன ஆணைகள்</u>

### <u>முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்</u>

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் பருவத்தில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த 144 பணியாளர்களை அவர்களது பணிமூப்பின் அடிப்படையில் நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இந்த பணியாளர்களுக்குரிய நிரந்தர பணி ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (23.4.2008) அவர்களுக்கு வழங்கி வாழ்த்தினார்.

இந்த ஆணையின்படி நிரந்தரப் பணிநியமனம் பெற்றுள்ள 144 பணியாளர்களுக்கும் ரூ,2750–70–3800–75–4400 என்னும் காலமுறை ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும்.

இந்தநிகழ்வின்போது உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. கே. பனிந்தரரெட்டி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9